
https://tamileelamarchive.com/

# கபன்





https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

# லெப். கேணல் சுபன்

எஸ். பிரதீபன்

எஸ். கதிரவன்

இது,
தமிழீழ விடுதலைப் புலிகள்
வெளியீட்டுப் பிரிவின்
வெளியீடு.

https://tamileelamarchive.com/


| | | |
|---|---|---|
| நூல் | : | லெப். கேணல் சுபன் |
| ஆக்கம் | : | எஸ். பிரதீபன் - எஸ். கதிரவன் |
| வெளியீடு | : | வெளியீட்டுப் பிரிவு,<br>தமிழீழ விடுதலைப் புலிகள்,<br>தமிழீழம். |
| முதற்பதிப்பு | : | கார்த்திகை 1998 |
| அன்பளிப்பு | : | ரூபா 20/- |

https://tamileelamarchive.com/

## நுழைய முன்...

மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதியாகப் பணிபுரிந்து, 25. 09 1992 அன்று வீரச் சாவை அணைத்துக்கொண்ட லெப். கேணல் சுபனின் நினைவாக, இச் சிறு நூல் வெளிவருகின்றது.

தளபதி சுபனைப்பற்றி 'பிரதீபன்' என்ற போராளி எழுதிய ஒரு கட்டுரையுடன் 'கதிரவன்' என்ற போராளி எழுதிய ஒரு நீண்ட கவிதையையும் கொண்டதாக, இச்சிறு நூல் அமைக்கப்பட்டுள்ளது.

தளபதி சுபனின் முதலாம் ஆண்டு நினைவாக இச்சிறு நூலை வெளியிட்டுவைப்பதில் நாம் பெருமையடைகின்றோம்.

வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி

# லெப். கேணல் சுபன்

**வினாசித்தம்பி சுந்தரலிங்கம்**

கள்ளியடி, இலுப்பைக்கடவை, மன்னார்.

https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

**1989** இன் இறுதிக் காலம்: இந்தியப் படைகள் ஆக்கிரமித்து நின்ற இருண்ட நாட்கள்.

முள்ளிக்குளத்தில் முகாம் இட்டிருந்த 'புளொட்' கும்பல் மீது 20. 05. 1989 அன்று நடாத்தப்பட்ட வெற்றிகரமான தாக்குதலின்போது, அப்போதைய மன்னார் மாவட்டத் தளபதியாக இருந்த பானு அண்ணன் படுகாயமடைந்து சிகிச்சைக்காகச் சென்றதை அடுத்து,

சுபன் அண்ணன் மன்னார் மாவட்டத் தளபதியாகப் பணியாற்ற நியமிக்கப்பட்டார்.

தளபதியாகப் பொறுப்பெடுத்து வந்த உடனேயே - இந்தியப் படைக்கு நல்லதொரு அடி கொடுக்கவேண்டும் என்று எண்ணங்கொண்ட சுபன் அண்ணன், அதற்காக மன்னார்த் தீவில் மருத்துவமனைக்கு அருகிலிருந்த இந்தியப் படைமுகாமைத் தேர்ந்தெடுத்தார்.

https://tamileelamarchive.com/

இத் தாக்குதலுக்கான திட்ட ஒழுங்குகளைச் செய்த அவர், அதனை நேரடியாகத் தலைமை ஏற்று நடாத்தும் பொறுப்பை மேஜர் சூட்டி அண்ணனிடம் ஒப்படைத்திருந்தார்.

எதிரி முகாமிட்டுக் காவல் புரிந்துகொண்டிருந்த ஒரே ஒரு தரைவழிப் பாதையைத் தவிர முற்றாகக் கடல் சூழ்ந்த தீவு. முழுமையாகவே இந்தியப் படை நிறைந்திருந்த அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசம். ஒரு பக்கம் 500 யார் தூரத்தில் பி. எம். சி. கட்டட முகாம்; மறுபக்கம் 500 யார் தொலைவில் தொலைத்தொடர்புப் பரிவர்த்தனை நிலைய முகாமைக் கொண்டு, மிகுந்த பாதுகாப்புக்கு நடுவில் இருந்தது மருத்துவமனை முகாம்.

1989.06.17 அன்று சுபன் அண்ணன் வகுத்த தாக்குதல் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

கடல்வழியாகத் தீவுக்குள் நுழைந்தது தாக்குதல் அணி. குறித்த நேரத்தில் மருத்துவமனை முகாம்மீது தாக்குதல் தொடங்க, அங்கிருந்த முகாம்களிலிருந்து உதவி கிடைப்பதைத் தடுப்பதற்காக அந்த முகாம்கள்மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டது.

குறைந்த நேரத்திற்குள் முகாம் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டு, 26 படையினர் கொல்லப்பட்டதுடன் 4 பிறண் எல். எம். ஜிகளுடன் 24 ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

புலிகளின் தாக்குதலணி எவ்வித இழப்புக்களுமின்றி, வந்த வழியாகவே தீவிலிருந்து வெளியேறியது.

இந்திய அரசையும் அதன் படைத் தலைமையையும் அதிர்ச்சி அடையச் செய்த தாக்குதல் இது என்பதில், வியப்பில்லை.

https://tamileelamarchive.com/

நூறு வீதம் பாதுகாப்பானது என அவர்கள் கருதியிருக்கக்கூடிய ஒரு வலையத்துக்குள் ஊடுருவி நடாத்தப்பட்ட தாக்குதல் என்பது ஒருபுறமிருக்க, தங்களது படையின் ஒரு முகாமையே தாக்கி அழித்துவிட்டு இழப்பேதுமின்றிப் போய் விட்டார்களே என, தமிழீழத்தை ஆக்கிரமித்திருந்த உலகின் நான்காவது பெரிய படை நிச்சயம் அதிர்ந்திருக்கும்.

தமிழீழத்தில் இந்தியப்படையின் பெரியதொரு முகாம் ஒன்று தாக்கப்பட்ட முதல் நிகழ்வும் கடைசி நிகழ்வும் அதுதான். இந்தியப்படையிடமிருந்து ஒரே தடவையில் கூடிய தொகையில் எல்.எம். ஜி. கைப்பற்றப்பட்ட முதல் சம்பவமும் கடைசிச் சம்பவமும் இதுதான்.

''இன்னொரு விக்ரரின் காலம்'' என மன்னார் மக்கள் பேசிக்கொள்ளத் துவங்கினார்கள்.

இந்தத் தாக்குதலோடுதான் சுபன் அண்ணனின் சகாப்தம் ஆரம்பித்தது.

1990 இன் ஆரம்பத்தில் இந்தியர்கள் இங்கிருந்து வெளியேற்றப்பட்டுக் கொண்டிருந்தபோது- இங்கேயே நிலைகொள்ள முயன்ற - அவர்களுடைய எச்சசொச்சங்களைக் களையெடுக்கும் பணி நடந்தது.

சுபன் அண்ணனும் மன்னார் மாவட்டத்தின் அணிக்குத் தளபதியாக வடதமிழீழத்தின் பலபகுதிகளிலும் அந்தப் பணியில் பங்கேற்றார். வவுனியா முசல்குத்தியில் புளொட் துரோகிகள் மீது, கிளிநொச்சியில் ஈ. என். டி. எல். எவ். துரோகிகள் மீது, குஞ்சுக்குளத்தில், தலைமன்னாரில் என எல்லா இடங்களிலும் சுபன் அண்ணையின் குழு களையெடுப்பை நடத்தியது.

இதற்குப் பிற்பட்ட காலப் பகுதி. தமிழீழத்தில் போர் ஓய்ந்திருந்த ஓர் அமைதி நிலை தோன்றியிருந்தது. எங்களது

https://tamileelamarchive.com/

போராளிகள் முழுமையாக மக்கள் அரங்கில் இறங்கி, அரசியல் வேலைகளில் ஈடுபட்ட வேளை.

அரசியல் வேலைசெய்யும் போராளிகளை அடிக்கடி அழைத்து சுபன் அண்ணன் கதைத்துக்கொண்டிருப்பார். மக்களோடு எப்படிப் பழகுவது, மக்களை எவ்வாறு அணுகுவது என்பதை எல்லாம் தானே செய்துகாட்டிச் சொல்லிக்கொடுப்பார். ''சிறிய ஊர்கள், குக்கிராமங்கள் எல்லாவற்றிற்கும் போகவேண்டும். தமிழீழத்திலேயே மிகவும் பின்தங்கிய மாவட்டமான மன்னாரில் மக்கள் மிகுந்த துன்பத்தை அனுபவிக்கின்றார்கள். அவர்களுடைய குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டும்'' என்றெல்லாம் விளக்கிச் சொல்லுவார்.

''மாவட்டத்திலுள்ள மூலைமுடுக்குகளுக்குள் எங்கள் செயலகங்களை அமைக்கவேண்டும். இந்திய ஆக்கிரமிப்பின் நெருக்கடியான சூழ்நிலைகளில் எங்களை இமைபோலக் காத்த கிராமப்புற மக்களிடமிருந்து நாம் அந்நியப்பட்டுப் போகக்கூடாது. மக்கள் எங்களைத் தேடி வராமல், நாங்கள் மக்களிடம் செல்ல வேண்டும்'' என சுபன் அண்ணன் எடுத்துக் கூறுவார்.

கிராமங்களுக்குள் அரசியல் வேலை செய்யும் போராளிகளின் நடவடிக்கைகள் பற்றி வேறு ஆட்கள்மூலம் தகவல்கள் அறிகின்ற அவர், பின்னர், அதிலுள்ள குறைநிறைகள் தொடர்பாக போராளிகளுக்கு ஆலோசனை வழங்குவார்.

மாவட்டத்திலுள்ள இராணுவ செயலகங்களானாலும் சரி, அரசியல் செயலகங்களானாலும் சரி,பண்டிவிரிச்சான் , அடம்பன் போன்ற கிராமப்புறங்களிலேயே அமைக்கப்பட்டன. மன்னார்த் தீவுப் பகுதியே நகரமாக இருந்ததால் அரச செயலகங்கள் எல்லாம் அங்கேயே அமைந்திருந்தன. இதன் காரணமாக மன்னார்ப் பெருநிலப்பரப்பில் வாழ்ந்த மிகப் பெரும்பாலான மக்

https://tamileelamarchive.com/

கள் அனுபவித்த அசௌகரியங்களை, சுபன் அண்ணன் நன்கு உணர்ந்திருந்தார். இதனாலேயே எமது இயக்கத்தின் அலுவலகங்களைத் தீவுக்கு வெளியே, கிராமப்புறங்களில் அவர் நிறுவினார்.

அடம்பனுக்கும் உயிலங்குளத்திற்கும் நடுவில்தான் மன்னார் மாவட்டத்தின் பெரிய நகரம் அமையவேண்டும் என்று அடிக்கடி கூறுவார். தமிழீழத்தில் அப்படித்தான் இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ளுவார்.

சண்டை அனுபவம் நிறைந்த ஒரு இராணுவத் தளபதியாக இருந்த அதே சமயம் - பெரிய அளவில் கல்வி அறிவைப் பெற்றிருக்காதபோதும் - அரசியல் வேலைத் திட்டங்களுக்கான அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்கி நெறிப்படுத்துகின்ற அறிவாளியாக இருந்தார்.

அவர் மக்களுடன் எவ்வளவு ஐக்கியமாக இருந்தார் என்பதை அவரது முகாமுக்குச் செல்வதன்மூலம் அறியலாம். எந்த நேரத்திலும் ஒரு மக்கள் தொடர்பகம் போலவே அது காட்சி தரும்.

அதிகாலை 4.30 மணிக்கெல்லாம் சுபன் அண்ணன் எழுந்துவிடுவார். ஆனால், அதற்கு முன்னாலேயே அவரைச் சந்திக்க மக்கள் முகாமில் கூடியிருப்பார்கள். நித்திரை விட்டெழும்பினதிலிருந்து வந்திருப்பவர்களுடன் கதைப்பார்.

சண்டை முனைகளிலிருந்து வந்து களைப்போடு இருக்கும்போதுகூட சந்திப்பதற்காக யாராவது வந்திருந்தால் பொறுமையோடு அவர்களுடன் கதைத்து அனுப்பிவைப்பார்.

மக்களுக்குள் இருந்த பிரச்சினைகளையும், சிக்கல்களையும் தீர்த்துவைப்பதில் சுபன் அண்ணன் மிகுந்த கரிசனைகாட்

https://tamileelamarchive.com/

டிச் செயற்படுவார். அவருக்கும் மக்களுக்கும் இடையில் இருந்த நெருக்கத்தை சம்பவங்களாகச் சொல்லிமுடிக்க முடியாது.

குடும்பங்கள் பிரிஞ்சிருக்கின்ற சிக்கல்கள் என்றால் நேரடியாக வீட்டைத் தேடிப்போய்விடுவார் சுபன் அண்ணன். எத்தனை குடும்பங்களை அப்படி அவர் சேர்த்துவைத்திருப்பார்....

''இன்னொரு விக்ரரின் காலம்'' என்று மக்கள் பேசிக் கொண்டார்கள்.

1990 இன் நடுப்பகுதிவரையான இடைக்கால அமைதிக் காலம்.

தமிழீழத்தின் தென் பிராந்தியத்தில் சிங்களப் படைகளின் அத்துமீறிய செயல்கள் பற்றிய செய்திகள் தகவல் பரிவர்த்தனை சாதனங்களில் வரும்.

கொலைகள், கைதுகள், சிங்களக் குடியேற்றங்கள் போன்ற சம்பவங்கள் நடக்கும்போதெல்லாம் சுபன் அண்ணன் சொல்லுவார் ''என்றாவது ஒரு நாள் பெரிய அளவிலான ஒரு இன அழிப்பு யுத்தத்தை சிங்களப் பேரினவாதம் எங்கள் மக்கள் மீது துவக்கும்'' என்று.

சுபன் அண்ணன் சொல்வதை மெய்ப்பிப்பதைப்போல, மன்னார் மாவட்டத்திலிருந்த சிங்களப் படைமுகாம்களில் யுத்த ஆயத்த ஒழுங்குகள் செய்யப்படுவதை எங்களால் நேரடியாக அவதானிக்க முடிந்தது. முகாம்களில் மேலதிகமாகத் துருப்புக்கள் குவிக்கப்பட்டனர். ஆயுத தளபாடங்கள் கொண்டுவந்து இறக்கப்பட்டன. காவலரண்கள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு, முகாம்கள் பலப்படுத்தப்பட்டன. இவை எல்லாம் எங்கள் கண்களுக்கு முன்னால் நடந்தன.

https://tamileelamarchive.com/

யூன் 11 ஆம் நாள், சுபன் அண்ணன் சொல்லிக்கொண்டிருந்தது நடந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெடித்த போர், ஐந்து நாட்களில் தமிழீழமெங்கும் பரவியது.

மன்னார் மாவட்டத்தின் முதல் நடவடிக்கையாக, தீவுப் பகுதியிலிருந்த கோட்டையில் அமைந்திருந்த பொலிஸ் நிலையம் முற்றுகையிடப்பட்டது. [illegible] பொலிசாரும் கைதுசெய்யப்பட்டனர். அங்கிருந்த ஆயுதங்களும் வாகனங்களும் ஏனைய பொருட்களும் எடுக்கப்பட்டன.

கைதாகிய சிங்களக் காவல்துறையினரை பாதுகாப்பாக மதவாச்சி வரை அனுப்பிவைத்தார் சுபன் அண்ணன்.

அவரின் அடுத்த இலக்கு மன்னாரிலிருந்த பழைய பாலம் இராணுவ முகாமாக இருந்தது.

தற்போதைய மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி ஜான் அண்ணன், மற்றும் லக்ஸ்மன் அண்ணன் ஆகியோரின் தலைமையில் ½ மணி நேரத்தில் அந்த முகாம் தாக்கி அழிக்கப்பட்டது.

16.06.90 அன்று அதிகாலை நடந்த அந்தத் தாக்குதலில் 40 இற்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; 81 மி.மீ. எறிகணை செலுத்தி உட்பட பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்பவை குறிப்பிடத்தக்கன.

இந்தப் பெரு வெற்றிகளைத் தொடர்ந்து, மன்னார் மாவட்டத்தின் தென் பகுதியில் இருந்த 'கஜுவத்தை' இராணுவ முகாம் சுபன் அண்ணனின் இலக்காக அமைந்தது.

அதுவொரு தமிழர்களின் பூர்வீகக் கிராமம். கொண்டச்சி என்பதுதான் அதன் பெயர். அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்

https://tamileelamarchive.com/

களை நடாத்தியதன்மூலம், சிறிலங்கா அரசு அதனை ஒரு சிங்களக் கிராமமாக மாற்றியது.

சிங்களத்தில், 'கஜுவத்தை' எனப் பெயரும் இட்டது. அங்கே இருந்த - பெருமளவில் வருமானத்தைத் தருகின்ற - மரமுந்திரிகைப் பண்ணையில் சிங்களவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டனர். இந்த 'ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தை' பாதுகாக்கவென ஒரு படைமுகாமும் அமைக்கப்பட்டது. அனைத்து வசதிகளும் பொருந்தியதாகவும், எவ்வேளையில் அச்சுறுத்தல் வந்தாலும் உதவி வழங்கக்கூடிய முறையிலும் அந்த முகாம் நிறுவப்பட்டது.

அந்த முகாமை நிர்மூலமாக்குவதற்கான தாக்குதல் திட்டத்தை சுபன் அண்ணன் வகுத்தார். அவர் வகுத்த திட்டத்தின்படி மேஜர் வசந்த் அண்ணன், கெக்குலர் அண்ணன் ஆகியோரின் தலைமையில் தாக்குதல் நடந்தது.

இராணுவரீதியாக மட்டுமன்றி - அந்த முகாமின் அமைவிடம் காரணமாக - அரசியல்ரீதியாகவும் மிக முக்கியத்துவம் மிக்க ஒரு நிகழ்வாக அந்தத் தாக்குதல் அமைந்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்வது என்பது ஒரு சாத்தியமற்ற விடயமே என்பதை, சிங்கள ஆட்சியாளர்களுக்குப் புரியவைத்த முதலாவது தாக்குதலாகவும் அது அமைந்தது என்பது, குறிப்பிடத்தக்கது.

மன்னார்த் தளபதியாகப் பணியாற்ற வந்தவுடன் இந்தியப் படையின் முகாம் ஒன்றைத் தாக்கியதன்மூலம், இந்திய ஆக்கிரமிப்புப் போர் வரலாற்றில் ஒரு முத்திரை பதித்த சுபன் அண்ணன், 'கஜுவத்தை' இராணுவ முகாம் தாக்குதலின்மூலம், விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்னொரு முத்திரை பதித்தார்.

https://tamileelamarchive.com/

'பவள்' கவசவண்டி ஒன்று எவ்வித சேதமுமின்றிக் கைப்பற்றப்பட்டதுதான் அது. எங்கள் போராட்டத்தில் இது முதல் நிகழ்வு.

தென்னாபிரிக்க நாட்டின் தயாரிப்பான இந்த 'பவள்' வகைக் கவசவண்டிகள், கண்ணிவெடிகளால் தகர்க்கப்பட முடியாதவை என பல இராணுவப் பரிசோதனைகள்மூலம் முடிவு செய்யப்பட்டவை ஆகும். ஆனால், இதே 'பவள்' கவச வண்டிகள் சில ஏற்கெனவே புலிகளின் கண்ணிவெடிகளால் நொருக்கப்பட்டுவிட்டன என்பதுகூடப் பழைய கதையாகிவிட்டது.

இந்த 'கஜுவத்தை' தாக்குதலின்போது இன்னும் ஆறு போராளிகளுடன் மேஜர் வசந்த் அவர்கள் வீரச்சாவை அணைத்துக்கொண்டார். மன்னார் மாவட்டத்தில் சகல இராணுவ முகாம்களுக்குமான வேவு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்த வசந்த் அண்ணன், தலைவரின் மெய்ப்பாதுகாவலர் அணியில் ஒருவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மன்னாரில் மக்கள் ''இன்னொரு விக்ரரின் காலம்'' என்று பேசிக்கொண்டார்கள்.

பரந்த வெளிகளையும், விரிந்த கடலையும் தனக்குரிய குறியீடாகக் கொண்டது மன்னார்.

இங்கே, பூநகரியிலிருந்து செல்லும் பிரதான வீதியில் இருக்கும் இலுப்பைக்கடவை என்ற இடத்திலுள்ள கள்ளியடி என்னும் கிராமத்தில்தான் சுபன் அண்ணன் பிறந்தார்.

1965 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆம் நாள், விநாசித்தம்பி சுந்தரலிங்கம் என்ற அந்தக் குழந்தை வசதிவாய்ப்பான ஒரு குடும்பத்தில் பிறந்தது.

https://tamileelamarchive.com/

சின்னவயதிலிருந்தே இலுப்பைக்கடவை பாடசாலையில் கல்விகற்றுவந்த அவர் உயர்வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் போது, விடுதலைப் போராட்டம் பற்றிய சிந்தனை அவரது நெஞ்சுக்குள் அலைமோதத் தொடங்கியது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தொடர்பு தேடித் திரியத் தொடங்கினார். 1984 ஆம் ஆண்டில் அது கிடைத்தது.

தமிழீழ விடுதலைக்கான ஆயுதப்போர் வரலாற்றில், மன்னார் மாவட்டத்தில் நடந்த முதல் தாக்குதல் - இராணுவ வண்டித் தொடர் மீதான முன்றாம்பிட்டி கண்ணிவெடிப்புத்தான். 1984 ஆம் ஆண்டு பதின்மூன்று சிங்களச் சிப்பாய்களைக் கொன்ற அந்தத் தாக்குதல் நடந்தது.

சுப்ன் அண்ணனின் போராட்டப்பணி இந்தக் கண்ணி வெடிப்பிலிருந்தே ஆரம்பிக்கின்றது.

அப்போது அந்தத் தாக்குதலைத் தலைமையேற்று நடாத்திய லெப். நிதியவர்கள், சுபன் அண்ணன் மூலமாகவே அந்த ரோந்து அணிபற்றிய தகவல்களைப் பெற்றார்.

ஒவ்வொரு தடவையும் அந்த ரோந்துத் தொடர் செல்கின்றபோது எத்தனை வாகனங்கள் செல்கின்றன? ஒவ்வொரு வண்டியிலும் எவ்வளவு துருப்புக்கள் இருக்கின்றார்கள் போன்ற விபரங்களைப் பார்த்துச் சொல்வது, சுபன் அண்ணனின் பணி.

ஒரு நாள் லெப். நிதி அவர்கள் சுபன் அண்ணனிடம், "இன்னும் ஒரு வாரத்தில் இந்த ரோந்து அணியை மறிக்கிறேன்; எதிர்பார்த்துக்கொண்டிருங்கள்" என்று சொன்னாராம்.

வழமைபோல மறுநாளும் இலுப்பைக்கடவைவரை பின்தொடர்ந்து சென்று வாகன ரோந்தை அவதானித்துவிட்டு சுபன்

https://tamileelamarchive.com/

அண்ணன் திரும்பி வந்த ½ மணி நேரத்தில், அந்த முன்றாம்பிட்டிக் கண்ணிவெடியின் சத்தம் மன்னார் மாவட்டத்தையே அதிரச் செய்தது.

நாட்கள் உருண்டோட, தகவலறிந்த சிங்களப் பொலிசார் சுபன் அண்ணனைத் தேடத் துவங்கினார்கள்; வீடு தேடிவர ஆரம்பித்தார்கள். அவர் தலைமறைவாக வாழவேண்டிய சூழ்நிலை உருவாகியது.

1985 இன் ஆரம்பத்தில், அதே ஊரைச் சேர்ந்த அவரது நண்பனான கப்டன் பெனா அவர்களுடன் இயக்கத்தில் முழுமையாக இணைந்துகொண்டார்.

(1989 ஆம் ஆண்டின் மே நாள் அன்று, வவுனியா நகரின் மத்தியில் பலத்த பாதுகாப்புக்கு நடுவில் - இந்தியப்படை முகாமில் சிறைவைக்கப்பட்டிருந்த 42 போராளிகள் சிறைச்சாலையை உடைத்துக் கொண்டு வெளியேறிய வெற்றிகரமான நடவடிக்கையில் முக்கிய பங்கு வகித்த கப்டன் பெனா அவர்கள் - பின்னர், இந்தியப் படையுடனான சண்டையொன்றின்போது வீரச்சாவடைந்தார்.)

இந்தியாவில் நடந்த ஒன்பதாவது பயிற்சி முகாமில் திறம்பட தனது பயிற்சிகளை முடித்துக்கொண்டு - முழுமையான ஒரு போர் வீரனாக - தமிழீழம் திரும்பிய சுபன் அண்ணன், அப்போது மன்னார் மாவட்டத் தளபதியாக இருந்த எமது இயக்கத்தின் மத்தியகுழு உறுப்பினர் லெப். கேணல் விக்ரர் அவர்களின் அணியில ஒருவராக நின்றார்.

அக்காலப்பகுதியில் நடந்த பல தாக்குதல்களில் சுபன் அண்ணனின் பங்கும் நிறைய உண்டு.

1986 இன் நடுப் பகுதியில் அடம்பனில் நடந்த சண்டை ஒன்றில் காயமடைந்து சிகிச்சைக்காகத் தமிழ்நாடு சென்ற சுபன் அண்

https://tamileelamarchive.com/

சுபன் அண்ணன் வகுத்த தாக்குதல் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது 60 பேர் கொண்ட இந்த ரோந்து அணியில் ஐந்தே நிமிடங்களில் 54 சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன், 55 ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன இந்தச் சண்டையின்போது எமது களது ஐந்து போராளிகளை நாங்கள் விலையாகக் கொடுத்தோம்.

இத்தாக்குதல்மூலம் போராட்ட வரலாற்றில் இன்னொரு முத்திரை பதித்தார் சுபன் அண்ணன். தமிழீழத்தில் முதன்முதலில் நடந்த மிகப்பெரிய பதுங்கித் தாக்குதல் அதுவாகும்.

சிங்கள அரசின் பாதுகாப்பு வட்டாரங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய இத்தாக்குதல், தங்களது பாதுகாப்பு நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்யவேண்டுமென அவர்களை வாய்விட்டுச் சொல்லவைக்கும் அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியது.

''இன்னொரு விக்ரரின் காலம்'' என மன்னார் மக்கள் பேசிக்கொண்டார்கள்.

இதன்பின் சிலாவத்துறை இராணுவ முகாம் தாக்குதலுக்கான ஏற்பாடுகளில் முழுமையாக இறங்கிய சுபன் அண்ணன், அந்த வேலைகளில் இரவுபகலாக ஈடுபட்டார்.

எமது இயக்கத்தின் யாழ்.மாவட்டப்பிரிவும், மன்னார் மாவட்டப் பிரிவும் கூட்டு நடவடிக்கையாக மேற்கொண்ட அத்தாக்குதல், 19.03.1991 அன்று ஆரம்பித்து நான்கு நாட்களாக நடந்தது.

அப்போதைய யாழ்.மாவட்ட சிறப்புத் தளபதியாக இருந்த தமிழ்ச்செல்வன் அண்ணன், தற்போதைய மன்னார் மாவட்ட சிறப்புத்தளபதி ஜான் அண்ணன் ஆகியோர் நேரடியாகத் தலைமை தாங்கி நடாத்திய இத்தாக்குதலின் ஒட்டுமொத்தத் தளபதியாக சுபன் அண்ணன் இருந்தார்.

https://tamileelamarchive.com/

இந்தத் தாக்குதலுக்கு ஒரு வரலாற்றுச் சிறப்பு உண்டு. சிங்கள அரசின் - வான், கடல், தரை- முப்படைகளையும் எதிர் கொண்டுதொடர்ந்து நான்கு நாட்கள் புலிகள் சமரிட்ட முதற்களம் இதுவாகும்.

40 சிங்களப் படையினர் கொல்லப்பட்டு, பெருமளவில் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்ட இத்தாக்குதலின்போது, எங்கள் 82 தோழர்களை நாங்கள் இழந்தோம்.

சிலாவத்துறையில் எமக்கு ஏற்பட்ட இழப்பு சுபன் அண்ணனை வெகுவாகப் பாதித்தது. இந்தத் துயரை ஆற்றவேண்டுமானால், சிங்களப்படைமீது மூர்க்கத்தனமான ஒரு தாக்குதல் நடாத்தவேண்டும் என அவர் வேட்கைகொண்டார்.

சிலாவத்துறையில் புலிகள் பாரிய பின்னடைவைச் சந்தித்துவிட்டார்கள் என, இறுமாந்து மார்தட்டிக்கொண்டிருந்தது சிங்கள அரசு.

சிலாவத்துறைத் தாக்குதல் முடிந்து சரியாக எட்டாவது நாள் -

அது 30.03.1991 இன் பகல்பொழுது.

அதே சிலாவத்துறையிலிருந்து முருங்கன் நோக்கி முன்னேறிக்கொண்டிருந்த இராணுவ அணியை வேப்பங்குளத்தில் வைத்து எதிர்கொண்டனர் புலிகள்.

களத்தில் நேரடியாக இறங்கியிருந்தார் சுபன் அண்ணன்.

சிங்கள இராணுவத்தின் தலைசிறந்த போர் அணியில் ஒன்றெனப் புகழ்பெற்ற கஜபாகு றெஜிமென்ற் அங்கு குதறப்பட்டது.

40 இற்கும் அதிகமான படையினர் பிணங்களாய்ச் சுருண்டார்கள். அதிநவீனரக ஆயுதங்கள் உட்பட பல இராணுவ தள

https://tamileelamarchive.com/

பாடங்களைப் புலிகள் கைப்பற்றினர். கொல்லப்பட்டவர்களில் 24 படையினரின் உடல்களையும் புலிகள் எடுத்துவந்தனர்

சிலாவத்துறை இழப்பிற்கு ஈடுசெய்து, சிங்களப்படைக்குப் பதிலடி கொடுத்து ஆயுதங்களையும், உடல்களையும் எடுத்துக் கொண்டுதான் தனது முகாமிற்குத் திரும்பினார் சுபன் அண்ணன்.

இந்தத் தாக்குதலின்மூலமும் போராட்டவரலாற்றில் இன்னொரு முத்திரை பதித்தார் சுபன் அண்ணன். சிங்களப்படையிடம் முதற் தடவையாக, ஒரே தாக்குதலில் 6 மினிமினி எல். எம். ஜிகள் கைப்பற்றப்பட்டது என்பதுவே அதுவாகும்

''இன்னொரு விக்ரரின் காலம்'' என மன்னார் மக்கள், பேசிக்கொண்டார்கள்.

அதற்கடுத்த மாதத்தில், வங்காலையிலிருந்து நானாட்டான் முகாமுக்குப் பொருட்களை ஏற்றிச்செல்லும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவ வண்டிகள் அடிக்கடி நொருங்கத் தொடங்கின.

சுபன் அண்ணனின் திட்டப்படி வீதி எங்கும் விதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் தங்கள் வேலைகளைச் சரியாகச் செய்தன.

புதிதாகத் தோன்றிய இந்தச் சிக்கலைச் சமாளிக்க, கால்நடையாகப் பொருட்களை எடுத்துவருவதைத் தவிர சிங்களப் படைக்கு வேறுவழி இருக்கவில்லை.

சிலாவத்துறை இழப்பின் சோகத்திலிருந்து முழுமையாக விடுபட்டிருக்காத சுபன் அண்ணன், இந்த இராணுவ அணியைத் தாக்கி அழிக்கத் திட்டமிட்டார்.

வங்காலையிலிருந்து பொருட்களுடன் வயல்வெளிகள் ஊடாக நடந்து நானாட்டான் செல்லும் படையினரைத் தாக்க, வஞ்சியன் குளத்தைத் தேர்ந்தெடுத்தார் அவர்.

https://tamileelamarchive.com/

இந்தத் தாக்குதலுக்குச் செல்வதற்குமுன் போராளிகளோடு கதைக்கும்போது. சுபன் அண்ணன் சொன்னார் -

''ஒமர்முக்தார் படத்தில், பெரு மணல்வெளியில் போராடு கின்றபோது தாங்கள் திரும்பி ஓடிவிடக்கூடாது என்பதற்காக, அவர்கள் தங்கள் கால்களையே கட்டிப்போட்டுவிடுகின்றார்கள். ஆனால் நாம் அப்படிக் கட்டிப்போடுவதில்லை. திரும்பி ஓடுவதற் காக அல்ல; எதிரியைத் துரத்திப் பிடிக்கவேண்டும் என்பதற்காக.''

பெருவெளியான அந்த வயல் நிலப்பரப்பில் இயன்றளவுக்கு உருமறைப்புச் செய்து, எங்களது தாக்குதலணி நிலை எடுத்தது.

வழமைபோல பொருட்கள் எடுத்துக்கொண்டு ரோந்து வந்த இராணுவ அணி, எங்களது தாக்குதல் வலையத்துக்குள் முழுமையாக வந்ததன்பின், புலிகளின் துப்பாக்கிகள் ஒரே சமயத் தில் பேசத்துவங்கின.

அது 29.04.1991இன் பகல்வேளை.

சில நிமிடப்பொழுது கடந்து செல்ல, 60 பேர் கொண்ட அந்தப் படை அணியில், என்ன நடந்தது என்பதைத் திரும்பிப் போய்ச் சொல்வதற்குக்கூட ஒருவரும் மிஞ்சவில்லை.

இந்தத் தாக்குதலின்மூலமும் போராட்ட வரலாற்றில் இன் னொரு முத்திரை பதித்தார் சுபன் அண்ணன்.

தமிழீழத்தில் மிகப்பெரிய அளவில் ரோந்து உலாவந்த சிங்களப்படையணி ஒன்றின்மீது தாக்குதல் நடாத்தி அப்படை யணி முற்றாக அழிக்கப்பட்ட நிகழ்ச்சி, வஞ்சியன்குளத் தாக்குதல் ஆகும்.

''இன்னொரு விக்ரரின் காலம்'' என மன்னார் மக்கள் பேசிக்கொண்டார்கள்.

https://tamileelamarchive.com/

இப்போது 1991 இன் மையப்பகுதி.

ஆரம்பித்தது ஆனையிறவுப் பெரும் சமர்.

உலகத்தினை தமிழீழத்தை வியந்துபார்க்க வைத்த அந்தச் சமரில், புலிகளின் படைகளை வழிநடாத்திய முக்கிய தளபதிக ளில் ஒருவராகக் களத்தில் நின்றார் சுபன் அண்ணன்.

அங்கு சண்டையில் ஈடுபட்டிருந்த மன்னார் மாவட்ட அணிக்கு அவர் தலைமை வகித்தார்.

ஆனையிறவுச் சமரின் பின் மன்னார் திரும்பியிருந்தபோது - 22.10.1991 அன்று பூநகரிப் பகுதியில் இராணுவம் தரையிறக்கப் பட்டு ஒரு படை நகர்வு செய்ததன்மூலம் - சிங்களப்படை அப்பகுதியைக் கைப்பற்றியது.

எதிர்த்துச் சண்டையிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழ்நிலை யற்ற ஒரு இடமாக அது இருந்ததால், அங்கு சண்டையை நாங் கள் தவிர்த்துக்கொள்ளவேண்டி நேர்ந்தது.

சுபன் அண்ணனைப் பொறுத்தவரை, சிங்களப்படையின் அந்த நடவடிக்கை அவருக்குப் பெரும் சவாலான ஒன்றாகவே அமைந்தது. எப்படியாவது இந்த இராணுவ வேலியை ஊடறுத் துத் தாக்கவேண்டுமென, அவர் அன்றிலிருந்தே செயற்படத் தொடங்கினார்.

காலம் மெல்லமெல்ல அசைந்து உருண்டுகொண்டிருந்தது. இந்த இடைக்காலத்தில், சிறிய அளவுகளிலான வெற்றிகரத் தாக்குதல்கள் மன்னார் மாவட்டமெங்கும் நடாத்தப்பட்டுக்கொண் டிருந்தன.

1992 ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்குப் பிற்பட்ட நாட்கள்-

https://tamileelamarchive.com/

யாழ். குடாநாட்டை முழுமையாக முற்றுகையிட்டு தனது இரும்புப் பிடிக்குள் வைத்திருந்த சிங்களப்படை, யாழ். குடாநாட்டின் மீது பாரிய படையெடுப்பொன்றை நடாத்தத் திட்டமிட்டது.

அப்போது வடபிராந்தியத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ தலைமையில் இந்தப் படையெடுப்புக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்துகொண்டிருந்தன.

இந்தப் படையெடுப்பை எதிர்கொண்டு முறியடிக்கும் ஏற்பாடுகளிலும் புலிகள் இயக்கம் முழுமூச்சாக ஈடுபட்டது.

இதன் ஓர் அங்கமாக - மன்னார் மாவட்டத்திலிருந்து ஒரு சண்டை அணியுடன் யாழ்ப்பாணம் சென்ற சுபன் அண்ணன், அராலிப்பகுதிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

எந்தமுனையிலும், எந்தவேளையிலும், எந்தவகையிலும் எதிரியை எதிர்கொள்ளத் தயாரான நிலையில் அங்கு தாக்குதலணிகளை நிறுத்திக் காவலிருந்தார் அவர்.

ஆனால், அராலித்துறையில் எமது வீரர்களால் புதைக்கப்பட்ட கண்ணிவெடியில் இராணுவ வண்டி ஒன்று சிக்கியபோது, யாழ். குடாநாடுமீதான படையெடுப்புக்குத் தலைமைதாங்கிய சிங்களப் படைத்துறையின் வடபிராந்திய ஆணைப்பீடமே அதில் அழிந்துபோனது.

இதன்பின்னர், அந்த யாழ்ப்பாணச் சமரை சிங்கள அரசு கைவிட்டுவிட்டது.

இதனைத்தொடர்ந்து மன்னார் திரும்பிய சுபன் அண்ணன், பூநகரியில் அமைக்கப்பட்டிருந்த சிங்களப் படைத்தளத்தின் ஒரு பகுதியைத் தாக்கி அழிக்க முடிவுசெய்து, அதற்கான ஏற்பாடுகளில் முழுமையாக ஈடுபடத்துவங்கினார்.

https://tamileelamarchive.com/

மாவட்டத்தின் நிர்வாகவேலைகள் அனைத்தையும் தனது மற்றைய தளபதிகளிடம் ஒப்படைத்துவிட்டு, பூநகரிப் பகுதிக்கு வந்து அங்கேயே தங்கியிருந்து, தாக்குதல் ஒழுங்குகளைப் பார்க்கத் துவங்கினார்.

அப்போதெல்லாம் சொல்லுவார் -

''நான் செத்தாலும் பரவாயில்லை - இவனுக்கு நல்ல அடி குடுக்கவேணும்.''

தோழர்களோடு கதைத்துக்கொண்டிருக்கும்போது பகடியாகச் சொல்லுவார் -

''சவப்பெட்டி அடிக்கிற வேலை நடந்துகொண்டிருக்கிறதா? இந்தமுறை எனக்கும் சேர்த்து ஒரு பெட்டியடியுங்கோ. அளவு தேவையெண்டால் இப்பவே எடுத்துக்கொண்டு போங்கோ......''

''இந்தமுறை இவன்களை நான் ரெண்டில ஒண்டு பார்க்கிறதெண்டுதான் இருக்கிறன்'' என்று, அடிக்கடி சொல்லுவார்.

அந்த நாள் வந்தது.

25.09.1992

பூநகரி சிங்களப் படைத்தளத்தின் பள்ளிக்குடாப் பகுதி மினி முகாமையும், அதனோடு சேர்ந்திருக்கும் 2½ மைல் நீள இராணுவ வேலியின் காவலரண்களையும் அழித்துவிடுவதுதான் தாக்குதல் திட்டம்.

எமது இயக்கத்தின் படைத்துறைத் துணைத்தளபதி பால்ராஜ் அண்ணன் தலைமையில் நடந்த இத்தாக்குதலில், அவருக்கு உறுதுணையாக நின்று சண்டையை வழி நடாத்தினார் சுபன் அண்ணன்.

https://tamileelamarchive.com/

புலிகளின் வீராவேசமான பாய்ச்சல்.

சுபன் அண்ணனின் கையிலிருந்து முழங்கிய எம். 16 ரைபிள் பொழிந்த ரவைகள்கூட எதிரிகளைத் துளைத்துச் சென்றன.

நின்றுபார்க்கமுடியாமல், தளத்தின் மையப்பகுதியிலிருந்த பிரதான முகாமைநோக்கி ஓட்டமெடுத்தான் எதிரி.

2½ மைல் தூரத்திற்கு இருந்த 60 இற்கும் அதிகமான காவலரண்களுடன், மினிமுகாம் ஒன்றும் அழிக்கப்பட்டது.

25 இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டதுடன் அதைவிட அதிகதொகையில் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

வீழ்த்தப்பட்ட எதிரிகளின் நிலைக்குள் நுழைந்துகொண்டிருந்தனர் புலிகள்.

எங்கோ காயமடைந்த நிலையில் கிடந்த எதிரிப்படையாளன் ஒருவன் துப்பாக்கியைத் தூக்கி எங்கள் தளபதியை இலக்கு வைத்து......

ஓ.....

எங்கள் சுபன் அண்ணன்....

எங்களை இடியெனத்தாக்கிய அந்த நேரத்தை வார்த்தைகளால் சித்திரிக்கமுடியாது.

''மன்னார்...— மன்னார்'' என்று மன்னாருக்கு ஒளிகொடுக்கவென்றே, தன்னையே உருக்கி ஓய்வில்லாமல் எரிந்துகொண்டிருந்த அந்த மெழுகுவர்த்தி அணைந்துபோனதா......?

அம்மாவாக...... அப்பாவாக...... ஆசானாக...... நண்பனாக...... தளபதியாக எல்லாமாகவும் நின்று, எங்களுக்கு

https://tamileelamarchive.com/

தாய்மண் விலங்கொடிக்க
தம்பியின் படையினிலே
சத்தியம் தவறாமல் பகையுடன்
நித்தமும் மோதியே
கால மகள் கைவிரிக்க
காவியமான கதை
மறந்திடத் தான் கூடிடுமோ?

வீரக்குலத்து மறவன் தமிழன்
மானமிழக்குமுன் உயிர்
துறப்பதிவன் காலச் சிறந்த குணம்
காலக் கய விழியில்
கைகட்டி மண்டியிட்டு - வாழ
வரம் கேட்கும் கொடுமையினை
கண்டுமே கொதித்தவன்.

தாய்மடியில் பூத்திடவே
பாருமே புகழ்ந்தது மண் மீட்க
பிறந்திட்ட மாவீரன் தான் என்று
உள்ளத்தில் வன்மையும்
கூடவே நல்ல மென்மையும்
கொண்டவன்.

கூலிகள் கொடுங்கோன்மை
தாழுயரக் கண்டு புறப்பட்ட
மறவன் நீ தமிழ் காக்க
அண்ணனவன் படையினிலே

https://tamileelamarchive.com/

பயின்றிட்ட வித்தைகள்
எதிரி தான் ஓட நீ
காட்டி விட்டாயோ!

காலங்கள் தானோடிக்
கடந்தாலும் எம்மனதில்
அழியா – அழித்திடா இடம்
சேர்த்தவனே புன்னகைக்கும்
உன்முகம் வேதனையில் சங்கமித்த
காலம் உனை வரிப் படையில்
இணைத்ததுவோ.

நீயுறங்கும் நேரமதில்
ஊருறங்க கண் விழித்து
காவல் செய்பவனே!
சாக்களத்தில் உற்றவனை
மீட்டிடவே உயிருடன்
உடல்தனையும் இத்
தரணியில் விதைத்தவனே!

துப்பாக்கி உன் கையில்
தவழ்ந்து வரும் வேளை
எப்பாக்கி கூட
எதிரிக்கு வைக்காமல்
தப்பாமல் குறி வைப்பதில்
உனக்கு நிகர் நீயேதான்.

https://tamileelamarchive.com/

புலிவீரர் தாமெமக்கு
விருந்தை படைத்திடும் முரசு.

குண்டணைக்க மறுத்தவனோ – இல்லை
செங்களத்தில் புறமுதுகிட்டவனோ
சிரத்தினிலே விழுப்புண் ஏற்றலும்
தன்னிலை மாறிடா
தமிழ்ப் புலி மறவனடா.

சொத்துக்கள் மேலாசை கொண்டவனோ
சொந்தங்களோடு பாசத்தில் மிதந்தவனோ
இல்லை கண்ணிமைக்கும் நேரமெல்லாம்
எதிரியை மின்னலாய் மாய்த்திட
திட்டங்கள் பல தீட்டி அவற்றில்
வெற்றியும் கண்டவன்.

உதித்திட்ட மண்ணில்
சொரிந்திட்ட குருதி
தன் உடலுமே
உரமாக அமைந்திட்ட
மறப்புலி வீர களங்கள்
நிறுவிட்ட வேங்கையின்
மைந்தன்.

முட்டிட்ட தலை துண்டிக்க
ஐ – பதது சிங்களவரைத் தண்டிக்க
வேறொன்று பார்க்க நீ சிந்திக்க
அவை திண்ணமாய் செய்துமே காண்பிக்க

https://tamileelamarchive.com/

விதைத்திடா வயல் வெளியில்
குவிந்தன தலைகள் என பி. பி. சி. வர்ணிக்க
போர் வரலாற்றில் புதுப்பாடம்
எழுதி விட்டான் கொண்டச்சியில்.

வஞ்சியங்குளத்து வாய்க்கால்கள்
குருதியில் நிரம்பிக் கிடக்க
அதில் தாமரை இதழ் போல்
சிங்களவர் தலை மிதக்க
கேட்டவர் வாய்மேல்
விரல் வைத்து நிற்க
மீண்டும் பி. பி. சி. 'நச்சிக்க'
ஆயுதங்கள் அள்ளியே
அண்ணனின் காலடியில் குவிக்க

வரலாறு காணாத எதிர்ப்புகளை சந்திக்க
வலுவற்ற இராணுவம் முகாமிடை முடங்க
வெற்றி நடை போடுகின்றான்
தம்பியின் படையணியில்.

மன்னவனே! உன் பெருமை
போர் புரி திறமை
எடுத்திங்கு கூறிடவே
வார்த்தைகள் போதவில்லை.

பச்சைப்பட்டி என புறப்பட்ட
கஜபாகு படை கச்சைகள்

https://tamileelamarchive.com/

அவிழ்ந்திட தலை தெறித்து ஓடிட
துணிவுடன் சிறுக்குளச் சந்தியிலே
செருக்களம் தானமைத்து
எதிர்த்தவன் சுபன்.

கரி காலன் வீரம் கண்டு
வளர்ந்ததனால் புதிதாக
போர் நடத்தி சிதைத்திட்டான்
குண்டர்களை காட்டு
நரிகளுக்கு உணவாக.

அமைதிக்கு வந்தவன்
இந்தியில் பேசியே - நாம்
சிந்திய குருதிக்கு
காலாய் அமைந்ததால்
குந்திடக் கூட
இடமில்லை என்று - பெரும்
சந்தியில் நின்றுமே
சாய்த்திட்டாய் அன்று.

கறை கொட்ட வந்தவன் எவனானாலும்
அவன் தலை தெரியாது புறமுதுகிடவே
மறப்புலிப்படைக்கு தலைமை ஏற்று
திறம்பட ஆடினாய் செங்கள கூத்து.

மாவீரன் பார் எங்கும்
அவன் நாமம் பூஜிக்க

https://tamileelamarchive.com/

மண்ணுக்காய் உயிர் நீத்த
மறவர்களை யாசிக்க
சமைத்திட்டாய் மாதூரபி
நின் ஓய்விலா உறுதியோடு.

புதிதாய் புறப்படும்
புலிவீரன் புறகள மீதிலே
விளையாட நீ காட்டும்
அளவிலா நின் பயிற்சி
அவை சிதறிய தலைகளை
எண்ணிடப் பாய்ந்திடும்
சமர்க்கள முயற்சி.

பாரெங்கும் போர்க் கோலம்
கதிரவன் தன்னிலை தானிழக்க
கரும் மேக மகள் கதிரவனை
தான் மறைக்க பூமித்தாய்
கண்களில் குருதி வழிந்தோட
வழியனுப்பி வைக்கின்றாள்
தன் வீரப் புதல்வனை.

எம் வீட்டு பூமரங்கள் கூட
உன் வரவை வேண்டி
பூத்திட மறுக்கிறது
தேனுண்ணும் வண்டுகள் - பச்சை
பழமுண்ணும் பட்சிகள்

https://tamileelamarchive.com/


ஏனோ பறந்து வர மறுக்கிறது
மாலையில் தாம் அமர்ந்து
கொஞ்சி விளையாட உனைத் தே

ஆயுதம் ஏந்திவிட்டாய்
புலிவீரரென்ன பற்றற்ற
பாமரரோ பாசமுடன்
நீ வளர்த்த நாய்க்குட்டி
கூட ஊண் உண்ண
மறுத்து ஒப்பாரி
செய்கிறது உன்
வரவைப் பார்த்து
ஓடி வந்து முத்தமிட.

வானமே தான் முழங்க – வெளியில்
குட்டைகள் வீடுகள் தானுறங்க
சீறிடும் வரிப்புலி பாய்ந்திட
எண்ணிட முடிந்திடா அரண்கள் வீழ்ந்திட
பொறி கக்கும் துப்பாக்கி நிறுத்தவே மறுத்திட

வெறி கொண்டு இளையவர் தாக்கிட
காவலை விட்டு சிங்களம் சிதறிட
திண்ணமாய் பூநகரிப் பாதை திறந்திட
திட்டங்கள் தீட்டியே மினிமுகாமோடிட
தாவியே வரிப்புலி சுடு கலன்களை திருப்பிட
வெட்டை வெளிகளில் குருதி பாய்ந்திட
விளைந்திட்ட நெற்கதிர் குருதியில் மிதந்திட

https://tamileelamarchive.com/



வட்டமே இட்டு ஹெலி வேட்டுக்கள் தீர்த்திட
விழுப்புண் ஏற்றிட்ட சிறுத்தையை மீட்டிட
தாவியே சுபன் களத்திடை புகுந்திட
பாய்ந்திட்ட குண்டொன்று
மறவன் சாய்ந்திட்டான் களமதில்.

பாரிய படை நடத்தி
புலி வீர வரலாற்றில் – புதுப்
பாடம் தானெழுதி
போர்க் கைதிகள் இருவரை
தான் பிடித்த தளபதிகள்
வரிசையில் முதல்வனாய்
மாவீரன் பட்டியலில்
இணைந்திட்டான் விக்ரர்.

பூநகரி முகாமுடைத்து
வரலாறு காண பல
சரித்திரத்தை உருவகித்து
பிறந்த மண்ணுக்காய்
புகழ் சேர்த்த விக்ரரின்
மறுவுரு என சான்றோரின்
நிலை மறுத்து உரைகள்
கண்டேன்.

தலைவன் கண்ணெதிரே
வளர்ந்திட்ட சிறு குழந்தை

https://tamileelamarchive.com/

உன் முகத்தில் தலைவனை
என் கண்ணெதிரே காண்கிறேன்
மானிடப் பிறவியின் பலனை
கண்டது உன்னிடமே
ஆயினும்
கண்கள் எதையோ தேடுகின்றன
உள்ளத்தில் ஏதோ ஒரு பாரம்
குரல்கள் கரகரக்க தொடங்கிற்று
ஏதோ ஓர் எதிர்பார்ப்பு
எதுவாகலாம் என்றவர் கேள்வி
புரியாத மொழியில் பதில்கள்.


முத்துச் சிரிப்பொலியை
முற்றாக நிறுத்திட்டான் - சுபன்
சிட்டாய் பறந்து என்
சிறகினை உடைத்திட்டான்
சந்தர்ப்பம் என நினைத்தேன்
சரித்திரமே படைத்திட்டான் சுபன்
சத்தியத்தை அளித்திட்டு
சித்தியும் அடைந்திட்டான்.

மன்னனே என் அண்ணனே
உனையிழந்து என்
கண்கள் பனித்ததை அறிவாயோ
அழுதிடவோ முடியவில்லை
அழகிழந்து உன் முகம் வாடுமோ

https://tamileelamarchive.com/

இதை என் கண்கள் காணுமோ
உன் உடல் விதைத்திடும்
முன்னரே ஆயிரம் சிங்களம் விழுமோ
அதைக் காணுமுன் என் விழிகள்
ஒளியிழந்து போகுமோ.

இல்லை இல்லவே இல்லை
மரணம் என்று வந்தவுடன்
கட்டித் தழுவி ஒப்பாரி
வைக்க ஈனமற்ற மானிடனா
உன் மரணம் என்ன
காலவன் கட்டளையா
இல்லையடா.



மாண்புடனே வணக்கங்கள்
செய்து வீர முழக்கமுடன்
விதைக்கப்படும் விடுதலை
வித்தல்லவா
காலனை கட்டையேற்ற
கட்டளைகள் இட்டவனே
கண்களிலும் நீரில்லை நானும்
ஓர் புலிவீரன் தானே.

செத்தவுடன் கல்லறையில்
புதைத்து விட வெறுப்பிழந்தர்
மானிடனா

https://tamileelamarchive.com/

யுத்தத்தில் எதிரி தானோட
உன் இரத்தத்தால் எழுதி விட்டாய்
வரலாறு.

போரென்று புறப்பட்ட பின்பு
புறமுதுகோட தேவை ஒன்றுள்ளதோ
எம் வரிப்புலிகள் சரித்திரத்தில்
மாற்றான் தலை குவிந்திட்ட செய்தி
கேட்டிட முன்னரே நின் முகம்
எம் மண்ணை முத்தமிடல் காண்பதோ

புன்னகைக்கும்
உன் முகம்
காணத் துடிக்கும்
என் மனம்
நின் பாதம்
போகுமிடம்
மலர்கள் தலை சாய்ந்து
மண்டியிடும்.

சங்கங்கள் வளர்த்த
தமிழ் உந்தன்
வார்த்தையில் தான்
ஊற்றெடுக்கும்
அறங்கள் மறங்கள்
கூட உன் பாத
சுவட்டில் பண்ணிசைக்கும்.

https://tamileelamarchive.com/

கானகத்தின் காவலனே
கண்ணுறங்கும் நேரமெல்லாம்
உன் பெயர் தானுரைக்க
கண்டேன் - என் நாவால்
உன் வாக்கு கேட்காது
இப் புவியில் வாழ்வு
தான் எதற்கு?

விதையாகி விழுந்தாலும் – எம்
மனதில் நிலையாய் இருப்பவனே
தமிழன்னை கண் துயர் துடைத்தவனே
இனித்திடும் இளமையில் பசி துயில்
மறந்து பொங்கிடும் பகையை
அடியோடழித்தவனே
மேநாடு என்று தன் சுகம்
பாராமல் சாவோடு பொருதி
பூவாய் மலர்ந்தவனே - இல்லை
விதையாய் விழுந்தவனே
நின் பெயர் இப்புவியில்
வாழ்க... வாழ்க...... வாழ்க.

— எஸ். கதிரவன்

https://tamileelamarchive.com/

40407137



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதியாகப் பணியாற்றி, 25.09.1992 அன்று, பூநகரி சிங்களப் படைத்தளத்தின் ஒரு பகுதி மீது நடாத்தப் பட்ட மிகப்பெரிய தாக்குதலின் போது வீரச் சாவடைந்த லெப். கேணல் சுபன் அவர்களின் நினைவு ஏடு.



இது
தமிழீழ விடுதலைப் புலிகளின்
வெளியீட்டுப் பிரிவின்
வெளியீடு.